[17th December 1959

Transport Co-operative Society

* 238 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. Minister for Electricity be pleased to state—

(*a*) whether this Government have received any communication from the Centre to set up a Transport Co-operative Society, and

(*b*) if so, the steps taken by the Government thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The proposals of the Government of India are under consideration of the Government.

SRI N. K. PALANISAMI : May I know whether this Government has received any information from the Planning Commission that the Government should form the Transport Corporation or else, they would not help this Government with funds in that regard?

THE HON. SRI V. RAMAIAH : That is entirely a different question.

SRI S. NAGARAJA MONIGAR : இப்படி கூட்டுறவு சங்கம் அமைப்பது ஆலோசனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மாநிலம் பூராவாக ஒரு சங்கமா அல்லது பலபல இடங்களில் பலபல சங்கங்களா அமைக்கப் போகிறார்கள்? பல் தொழில் சம்பந்தமாக ஒவ்வொரு இடங்களிலும் ஆரம்பிப்பார்களா?

THE HON. SRI V. RAMAIAH : கூட்டுறவு அடிப்படையிலே, "குட்ஸ்" போக்குவரத்து சம்பந்தமாக ஒரு பைலட் ஸ்கீம் ஆரம்பிக்க ஆலோசனை ; 50 அங்கத்தினர்களைச் சேர்த்து திட்டம் அமுலாக்கப்படும். இதற்குக் காரணம், படித்தவர்களுக்கு வேலை தேடிக்கொடுக்கும் நோக்கத்தோடு பரீட்சார்த்தமாக ஒரு திட்டம் அமுலாக்கப்படவேண்டும் என்பது யோசனை. விதி முறை முதலியவை ரெஜிஸ்ட்ராரிடமிருந்து வந்திருக்கிறது, அதெல்லாம் ஆலோசனையில் இருக்கிறது.

SRI N. K. PALANISAMI : May I know who are all benefited by this and whether any grant is expected from the Central Government?

THE HON. SRI V. RAMAIAH : This is to benefit, as I have earlier stated, the educated young men of this State. As a pilot scheme, we have decided to organise a Co-operative Goods Transport Society with 10 vehicles in the beginning.

SRI M. KALYANASUNDARAM : பரீட்சார்த்தமாக நடத்தும் திட்டத்தில் முதலில் பஸ்களை எடுக்க வேண்டிய காரணம் என்ன? அப்படி எடுத்தால் அதில் நஷ்டம் ஏற்படும். அதனால் கூட்டுறவு முறையில் நடத்துவது சாத்தியம் இல்லை என்பதை நிரூபிக்கவா அப்படி முதலில் இதை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

17th December 1959]

THE HON. SRI V. RAMAIAH : அதில் நஷ்டம் ஏற்படாது என்று நம்புகிறோம்.

SRI P. S. CHINNADURAI : கூட்டுறவு முறையில் பஸ் போக்குவரத்து நடத்துவதற்கு யாரேனும் முன் வந்தால் அந்தப் பகுதியைச் சார்ந்த பொதுமக்கள் அதற்கு தயாராக இருந்தால் அப்படிப்பட்ட தனியாருக்கு உதவி அளிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : கூட்டுறவு முறையில் பஸ் போக்குவரத்தை எடுத்து நடத்த யாராவது ஆசைப்பட்டால் அதற்கு ஓரளவு அரசாங்கம் சலுகை காட்டிக்கொண்டுதான் வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : கூட்டுறவு போக்குவரத்து சங்கம் ஏற்படும்போது அந்தப் பக்கத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் மட்டும் அதில் இருக்கலாமா அல்லது தொழிலாளர்கள் அல்லாதவர்களும் அதில் இருக்கலாமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தக் கேள்வி ஒரு தனிப்பட்ட பிரச்னையாக வந்திருக்கக்கூடிய கேள்வி. கனம் அங்கத்தினர் இப்பொழுது கேட்கக்கூடிய கேள்வி ஒரு குறிப்பிட்ட ஸ்கீமைப் பற்றியது. கூட்டுறவு இயக்க அடிப்படையில் பஸ் போக்குவரத்து, குட்ஸ் ட்ரான்ஸ்போர்ட் முதலியவைகளை எடுத்து நடத்த வேண்டுமானால் அது சம்பந்தப்பட்டிருக்கக்கூடியவர்களையும் அங்கத்தினர்களாக சேர்க்கப்படும்.

SRI K. B. S. MANI : பரீட்சார்த்தமாக நடத்த இருக்கும் இந்த பைலட் கூட்டுறவு இயக்கத்தில் சேர்க்கப்படப்போகிற ஐம்பது அங்கத்தினர்களும் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களா அல்லது லட்சாதிபதி வர்க்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களா ?

TRUTH ALONE TRIUMPHS

THE HON. SRI V. RAMAIAH : இந்த திட்டத்தை எடுக்கும் நோக்கமே வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பதற்குதான் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கப் போகிறோம். அதற்குத்தான் இதை நடைமுறைக்குக் கொண்டு வரப்போகிறது. லட்சாதிபதிகளும் வேலை இல்லாமல் இருக்கலாம். அப்படி அவர்களும் இருந்தால் அவர்களையும் அதில் சேர்த்துக் கொள்வதில் கஷ்டம் இல்லை.

SRI S. M. ANNAMALAI : வேலை இல்லாதவர்களுக்கு வேலை தேடித் தருவதற்கு என்று இந்த இயக்கம் ஆரம்பிக்கப்படுகிறது என்று கனம் அமைச்சர் சொன்னார். மாஜி ராணுவத்தினர் பஸ் போக்குவரத்தை நடத்தி வருகிறவர்களுக்கு மேலும் உதவி அளிக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : அவர்களுக்கும் நிறைய உதவி செய்து கொண்டிருக்கிறோம்.

[17th December 1959

Sri A. GOVINDASAMY : மாஜி ராணுவத்தினருக்கு நிறைய உதவி அளிக்கப்படுவதாக கனம் அமைச்சர் குறிப்பிட்டார். தென்னார்காடு ஜில்லாவில் மாஜி ராணுவத்தினருக்கு ஒரு குறிப்பிட்ட பஸ் ரூட் கொடுக்கவேண்டியது நியாயமாக இருக்கும்போது அதை தனியாருக்கு வழங்கி இருக்கிறார்கள். அதைப்பற்றிய வழக்கு ஹைகோர்ட்டுக்கு வந்தது கனம் அமைச்சருக்குத் தெரியுமா?

The Hon. Sri V. RAMAIAH : ஹைகோர்ட்டுக்குப் போகக் கூடியதாக இருப்பதால் நாம் அதில் நேரடி தலையிடுவதற்கு ஒன்றும் இல்லை.

Aid from U.S.A. for Higher Agricultural Education

***239 Q.—Sri A. VEDARATHNAM :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

விவசாய மேற்படிப்பிற்கு அமெரிக்கா அளித்திருக்கும் ரூ. 40 லட்சம் உதவியில் இந்த மாநிலத்திற்கு எந்தெந்த கல்லூரிக்கு எந்தப் பாடத்திட்டம் போதிக்க எவ்வளவு ரூபாய் உதவியளிக்கப் பட்டிருக்கிறது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : It has been ascertained from the Indian Council of Agricultural Research, New Delhi, that during the last five years a number of agreements have been concluded between the Government of India and Technical Co-operation Mission for providing technical assistance to the Agricultural and Veterinary Colleges in India. However, no agreement for the specific amount of Rs. 40 lakhs referred to in the question has been concluded. The following are the institutions in this State which will benefit and the value of equipment and books approved for allotment :—

Name of the Institution.	*Value.* $
1. Annamalai University, Chidambaram	7,812·00
2. Veterinary College, Madras	90,304·00
3. Agricultural College and Research Institute, Coimbatore	73,612·00
4. Institute of Veterinary Preventive Medicines, Ranipet	794·00
Total ...	172,522·00
	or Rs. 8,19,479·50 nP.

Sri A. VEDARATHNAM : இந்த உதவியின் மீது எந்தக் கல்லூரிகளில் என்ன பாடத் திட்டம் மேல் படிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை தயவுசெய்து அறிவிக்க முடியுமா?